# வவுனியாவில் இராணுவ நடவடிக்கை தோல்வி !

(யாழ்ப்பாணம்) வவுனியா மாவட்டத்தில் மடுவை நோக்கி முன்னேறுவதற்கு படையினர் எடுத்த முயற்சிகள் தோல்விகண்டுள்ளதாகத் தெரியவருகிறது. இப்பகுதியில் நேற்று படையினர் தமது தாக்குதலை குறைந்துள்ளதாகவும் படை

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 ஆனி 7 துல்ஹஜ் 8 இதழ் 130

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-06-1991

## விமானத் தாக்குதலினால் பல வீடுகள் சேதம்!

(யாழ்ப்பாணம்) பூவரசங்குளம், சின்னத் தம்பனை, பிரமனாலயங்குளம், குருக்களூர், பெரியதம்பனை ஆகிய இடங்களில் இடம் பெற்ற விமானத் தாக்குதல் களினால் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டிடங்கள், பாடசாலைகள் சேதமடைந்துள்

[4ம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் கொலைக் குண்டு சென்னையில் தயாரிப்பு !

(புதுடில்லி) ராஜீவ் காந்தி கொல்லப் பட்டதற்கு பயன்படுத்தப் பட்ட வெடிகுண்டு சென்னையிலேயே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என தற்போதைய

[4ம் பக்கம் பார்க்க]

# ★ மணலாறு காட்டுப்பகுதியில் புலிகள் அதிரடித் தாக்குதல்

# பத்தொன்பது ராணுவம் பலி!

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மணலாறு)

மணலாறு (வெலிஓயா) பகுதியில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் பத்தொன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்கள் மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்களும் விடுதலைப்புலிகளினால் மீட்கப்பட்டன.

நேற்று அதிகாலை மணலாறு பகுதியிலுள்ள காடுகளை வெட்டிக்கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதலை நடத்தினார்கள்.

புலிகளின் தாக்குதலினால் நிலைகுலைந்த படையினரில் பலர் ஆயுதங்கள் மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்களை போட்டுவிட்டு ஓட்டமெடுத்தனர்.

இத்தாக்குதலின்போது இறந்த இராணுவத்தினரின் ஆயுதங்கள் உட்பட பல இராணுவத் தளபாடங்கள் புலிகளினால் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு வாரத்தில் மட்டும் 75 இராணுவம் உயிரிழப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் கடந்த ஒரு வாரத்தில் நடந்த சண்டையில் மட்டும் எழுபத்தைந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நூற்

(4-ம் பக்கம் பார்க்க)

## வேங்கைகள் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்கு

[யாழ்ப்பாணம்] வவுனியா மாவட்டத்தில் கடந்த 19-ஆம் திகதி சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தினருக்குப் பாரிய இழப்பினை ஏற்படுத்தி இறுதிவரை தீரமுடன் போராடி வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட

(4ம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ் இந்திய பிரதமர்

[புதுடில்லி] இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக திரு, பி. வி. நரசிம்மராவ் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இ. காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவராக ஏகமனதாக தெரிவானதன் மூலம் இவர் பிரதமராகிறார்.

நேற்றுப் பிற்பகல் புதுடில்லி

(4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னையைதீர்க்குமாறு பாராளுமன்றில் வற்புறுத்து

(கொழும்பு) இனப் பிரச்னைக்கு உடனடியாகச் சமாதானத் தீர்வைக் காணுமாறு பாராளுமன்றத்தில் நேற்று ஆளும் கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதம் நீடிப்பது தொடர்பாக நடந்த விவாதத்தில் உரையாற்றும்போதே இருதரப்பு எம். பி க்களும் இதனை வற்புறுத்தினர்.

இனப்பிரச்னைத் தீர்வு குறித்து அரசு தயாரித்துள்ள யோசனையை அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசின் செயலுக்கு பலத்த கண்டனம்

(கொழும்பு) கொக்கட்டிச் சோலையில் 220 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை வன்மையாக கண்டிக்கப்படவேண்டியது என நவசமசமாஜக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்

(4ம் பக்கம் பார்க்க)



இராணுவ ஆக்கிரமிப்பைக் கண்டித்து வலிகாமம் பொதுமக்கள் நடாத்திய எழுச்சி ஊர்வலத்தில் பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் பெருமளவில் கலந்துகொண்டதைபடத்தில் காணலாம். [படம்: தேவா]

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

சிவனு சிவபாலயோகி, யொக்ஸ் போட் டிவிஷன், வட்டக்குடை என்பவருடைய அடையாள அட்டை இல. 7114685 6X2 மற்றும் ரொக்கப்பணம், பகவானின் படம், யந்திரத்தால் கீறிய துர்க்கையின் படம் கடிதங்கள் மணிபேர்சுடன் [அதன் நிறம் கறுப்பு] யாழ்ப்பாணம் வீதியிலுள்ள கடையொன்றில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணுல் விலாசத்தில் ஒப்படைக்கவும். V. முத்துக்குமாருக் குருக்கள், 'சிவபதி', கந்தரோடை மேற்கு, சுன்ஞகம். [4884]

## அக்குபங்சர் சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினுல் நாரிப்பிடிப்பு, மூட்டுவாதம், தொய்வு, கபாலக்குத்து, தோல்வியாதிகள், நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது. மேலதிக் விபரங்களுக்கு: இல. 121/2 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். இல. 95, யாழ். வீதி, மானிப்பாய். திருமதி சத்தியமூர்த்தி, புகையிரத வீதி, கொக்குவில். (சி 4882)

## விசேட ஆங்கில வகுப்பு

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் 20 - 06 - 1991 தொடக்கம் விசேட ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் சபா அழகரட்ணம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி வகுப்புகள் நடத்துகின்றூர். இவ்வகுப்புகளில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் திரு. பே. றஞ்சநாதன், செயலாளர், மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (சி4877)

## இருள் இரவில் அல்ல

''எந்த ஒரு ஆணும் வயோதிப காலத்தில் மனைவியை இழக்கக்கூடாது. எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக்கூடாது. இழந்தால்?'' விற்பனையாகின்றது (சி 4879)

## ஜோதிடம்

வாழ்க்கைப் பிரச்சனை, தொழில், கல்வி, விவாகம் ஆகியவற்றின் தடைகள் மற்றும் எல்லாப் பிரச்சனைகளும் ஆராய்ந்து சரியாக நிவாரணம் கூறப்படும். பலன் தவறினுல் பணம் திரும்பப்பெற உத்தரவாதம. ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறைவீதி. [அரசடிச்சந்தி] நல்லூர். [சி 4873]

## தலைமையுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த தலைமையுரையாக இவ்வருடம் ''அபிவிருத்தியில் உயர்கல்வி'' என்னும் பொருள் பற்றி சங்கத்தின் முதற் தலைவர் பேராசிரியர் அ. துரைராசா (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்) இன்று 21ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் உரையாற்றுவார்.

## அறிவியல் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி கல்வி அபிவிருத்தி நிறுவனம் நடத்தும் வாராந்த அரசியல் சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணியளவில் கலைவாணி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் நல்லொழுக்க வாழ்வு என்னும் பொருளில் அறவழிப் போராட்டக்குழு நிர்வாக இயக்குநர் திரு. க. ஜீவகதாஸ் உரையாற்றவுள்ளார்.

# உடுவில் பகுதியில் திருட்டு அதிகரிப்பு

(உடுவில்)

உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள மூன்று கடைகள் ஒரே இரவில் உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப் பட்டுள்ளன.

இரண்டு பல சரக்குக் கடைகளும், ஒரு புத்தக நிலையமும் உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருட்களும், க.பொ.த. உயர்தர பாடத்திட்ட அப்பியாசப் புத்தகங்களும் களவாடப்பட்டுள்ளன.

அண்மைக் காலங்களில் இதே பகுதியில் ஏழுகடைகள், இரண்டு கூட்டுறவுக்கடைகள், இரண்டு கோவில்கள், ஒரு தனியார் வீடு ஆகியன பூட்டு உடைக்கப்பட்டு, பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினரிடம் பொதுமக்களும் வர்த்தகர்களும் முறைப்பாடு செய்துள்ளனர். (109)

## இராசி பலன்

**21-06-1991**

**வெள்ளிக்கிழமை**

தசமி பி.இ. 2-20 வரை. சித்திரை பி. இ. 3-21. மரணயோகம்.

இராகுகாலம் காலை 10-24 முதல் 11-34 வரை.

சுபவேளை மாலை 7-54.

மேடம்: தொழில் முன்னேற்றம், தர்ம சிந்தனை, அறிஞர் பாராட்டு.

இடபம்: குடும்பத்தில் சுபகாரியம், அதிஷ்டவாய்ப்பு, புகழ்.

மிதுனம்; கோபப்படல், தாயன்பு, வசதியான மாற்றம்.

கடகம்: மனைவியால் துயர், கடமை தவறல், கண்டிப்பு.

சிங்கம்: கற்பனை மிகுதி, அலைச்சல் குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவு.

கன்னி: குடும்ப கலவரம், தொழில்மாற்றம், பயமிகுதி.

துலாம்: தொழில் போட்டி, பணவரவு, குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்: பகைவர் துன்பம், அதிகாரிகள் கெடுபிடி, மனவேதனை.

தனுசு: வெற்றி வாய்ப்பு, தொழில்சிறப்பு, புதிய முயற்சி.

மகரம்: தற்பெருமை, அவசரபோக்கு, வாக்குவன்மை.

கும்பம்: காரிய தாமதம், பணியாள் தொல்லை, அகால போஜனம்.

மீனம்: மனப்போராட்டம், இனசனபகை, நோய், குடும்ப கஷ்டம்.

- ஜோஸ்யர்

## வருடாந்த பரிசளிப்பு வைபவம்

[யாழ்ப்பாணம்]

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை 22ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பரிசளிப்புவைபவத்துக்கு யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகவும், சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்கின்றனர். [வி]

# உத்தரப் பிரதேசத்தில் பாரதிய ஜனதா கட்சிக்கு அதிக இடங்கள்

(புதுடில்லி)

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியமைக்கும் தறுவாயில் உள்ளது.

425 ஸ்தானங்களை உடைய சட்ட சபைக்கு 404 ஸ்தானங்களுக்கே தேர்தல் நடந்தது. அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளில் 188 இடங்களில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தில் 82 இடங்களைப் பெற்ற ஜனதா தள்ளும், மூன்ரும் இடத்தில் 36 இடங்களைப் பெற்ற இந்திரா காங்குரசும் உள்ளன. (பூ)

# 6 நாட்களாகத் தொடர்ந்து ஷெல் தாக்குதல்

(சித்தன்கேணி)

பொன்னுலை, மூளாய்ப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயருகின்றனர்.

வலந்தலைச் சந்தியிலுள்ள இராணுவத்தினர் கடந்த ஆறு தினங்களாக தொடர்ச்சியாக மேற்கொள்ளும் ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து மூளாய் பொன்னுலைப்பகுதி மக்கள் தமது உடமைகளுடன் வீடுகளிலிருந்து நாள்தோறும் வெளியேறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவர்கள் வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கானை ஆகிய இடங்களில் தற்போது தஞ்சமடைந்து வருகின்றனர். (137)

# இன்று அ.தி.முக. சட்டமன்ற குழுத்தலைவர் தெரிவு

[சென்னை]

தமிழ்நாடு சட்ட சபைக்குத் தெரிவான அ.தி.மு.க, உறுப்பினர்கள் இன்று கூடி சட்டமன்றக்குழு தலைவரைத் தெரிவு செய்யவுள்ளனர்.

அநேகமாக கட்சியின் பொதுச்செயலர் செல்வி ஜெயலலிதாவே சட்டசபைத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு முதல் மந்திரியாவார் என்பது உறுதியாகிவிட்டது.

தமிழ்நாட்டு சட்டசபையில் 232 ஆசனங்களில் 163 ஆசனங்களை அ. தி. மு. க வும், அதன் கூட்டுக்கட்சியான இந்திரா காங்கிரஸ் 61 இடங்களையும் கைப்பற்றியது தெரிந்ததே. [பூ]

## டாக்டர் பிலிப்ஸ் அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப்பின் மறைவையொட்டி யாழ். உதைபந்தாட்ட லீக், அஞ்சலிக் கூட்டம் ஒன்றை எதிர் வரும் ஞாயிற்றுற்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் மேற்படி அஞ்சலிக்கூட்டத்தில் யாழ். உதைபதாட்ட லீக்கின் மறைந்த தலைவர் டாக்டர் பிலிப்பின் உருவப்படத்திறப்பு வைபவமும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும் இந்த அஞ்சலிக் கூட்டத்தின் பின்பு புதிய தலைவர் தெரிவும் நடைபெறும் என்று, யாழ். உதைபந்தாட்ட லீக்கின், காரியதரிசி திரு கினிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார். (வி)

## இன்று

(கிளிநொச்சி)

பூநகரி நல்லூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் முதலாவது இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று எவரெடி விளையாட்டு மைதானத்தில் அதிபர் பொன். தில்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறூர்.

## கலை, இலக்கிய போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் சிறுகதை, கவிதை, ஓவியம், கட்டுரை, பொது அறிவு, போட்டிகளை சனசமூகங்களிடையே நடாத்தவுள்ளது.

மேற்படிபோட்டிகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடாத்தப்பட இருப்பதாகவும், இதற்கான சகல ஏற்பாடுகளையும் தாம் செய்து வருவதாக மேற்படி சமாசத்தின் செயலாளர் திரு. சி. அமிர்தலிங்கம் தெரிவித்தார். [வி]

## புனித யுவானியார் திருநாள்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம் கோவில் வீதிச் சந்தியிலுள்ள புனித யுவானியார் (ஸ்நாபக அருளப்பர்) வருடாந்த திருவிழா கடந்த 15ந்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருநாள் 24ந் திகதி திங்கட்கிழமை காலை கூட்டுத் திருப்பலி-ஆலயஉள்வீதி திருச்சொரூபபவனி ஆகியவற்றுடன் முடிவுறுமெனத் தெரியவருகின்றது. [59]


# தொழிற்பயிற்சிகள்

★ **றேடியோ, T. V. வீடியோ டெக் றிப்பியறிங்**

சகல இன றேடியோ, T. V., வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

★ **COMPUTER PROGRAMMING**

**BASIC, COBOL, d Base III + Word Processing, LOTUS 1-2-3**

பயிற்சியளிக்கப்படும்.

★ **றீவைண்டிங்**

மின்மோட்டார், மின்விசிறி, ரான்ஸ்போமர், எலெக்ரிக்கல் உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல். ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

★ **எலெக்ரிக்கல் வயறிங்**

வீட்டு மின்சாரவேலை, மின்சார உபகரணங்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 2 மாதம்

★ **AIR CONDITION & REFRIGERATION ENGINEERING**

சகல இன குளிர்சாதனங்கள் திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

★ **புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்:**

24 - 06 - 1991 (கிழமை நாட்கள்)

22 - 06 - 1991 (சனி, ஞாயிறு)

# JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி) (ஏ-1389)

# 1972-ம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் 'புதிய தமிழ்ப் புலிகள்' உருவாகினர்

(நேற்றைய தொடர்ச்சி]

பேயுருவம் பெற்றுவந்த சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நின்று போராடும் உறுதிப்பாடோ, செயற்திறனோ தீர்க்க தரிசனமோ, உருப்படியான கொள்கைத் திட்டமோ எதுவுமற்ற பழைய தமிழ்த் தலைமையில் புதிய இளம் சமுதாயத்திற்கு நம்பிக்கை தளர்ந்தது. பிரித்தானிய காலனித்துவம் திணித்துச் சென்ற பாராளுமன்ற அரசியல் முறை சிங்களப் பெரும்பான்மை சர்வாதிகாரத்திற்கும், வல்லாதிக்கத்திற்கும் வலுவூட்டி வந்ததால் பாராளுமன்ற அரசியலிலும் அவநம்பிக்கை ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, மென்முறை வழியைத் தழுவி நின்ற அகிம்சைப் போராட்டம் அன்றைய புரட்சிகர சூழ்நிலைக்கு ஒவ்வாதது என்ற விழிப்புணர்வும் ஏற்பட்டது. மனிதாபிமானமற்ற, மனித தர்மங்களுக்கு மதிப்பளிக்காத அடக்குமுறையாளரின் மிருகத்தனமான வன்முறைக்கு எதிராக, மென்முறையான, ஆத்மீக அறநெறி தழுவிய போராட்டவடிவம் வெற்றியளிக்கப் போவதில்லை என்பதை தமிழீழ இளம் சமூகம் உணர்ந்து கொண்டது.

அடக்குமுறையாளரின் வன்முறையானது மனித உரிமைகளையும், அடிப்படை மனித சுதந்திரங்களையும் நசுக்கி, தமிழின ஒழிப்பை இலக்காகக் கொண்டதால் அது அநீதியானது, பிற்போக்கானது. அடக்குமுறையாளரின் இந்த அநீதியான, பிற்போக்கான வன்முறைக்கு எதிராக அடக்கப்படும் மக்கள் உரிமைகோரி, சுதந்திரம் கோரி, நீதி கோரி மேற்கொள்ளும் வன்முறைப் போராட்டம் முற்போக்கானது, நியாயமானது. இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் வன்முறை அரசியல் போராட்டத்தில் குதிக்க புரட்சிவாதத் தமிழ் இளைஞர்கள் தீர்மானித்தனர்.

இதுவரை காலமும் அமைதி வழியில் நடைபெற்று வந்த அரசியல் போராட்டம் எழுபதின் ஆரம்பத்தில் வன்முறை தழுவிய போராட்டமாக வெடித்தது. கொலை முயற்சிகள் குண்டுத்தாக்குதல்கள், அரச உடைமைகளை நாசம் செய்தல், பேருந்துகளுக்கு தீ வைத்தல், அரச கொடியை எரித்தல் இப்படியாக பரவலாக அரசியல் வன்முறை குமுறியது. புதிய இனவாத அரசியலமைப்பை ஆதரித்து தமிழ்த் துரோகிகளாக கருதப்பட்ட தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசின் அடிவருடிகளாக செயற்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள், அரச அடக்குமுறையின் ஏவுநாய்களாக செயற்பட்ட தமிழ்க் காவற்றுறை அதிகாரிகள் ஆகியோர் மீது திட்டமிட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழீழத்தில் தலையெடுத்த வன்முறைப் போராட்டம் சிங்கள அரசுக்கு ஒரு புதிய சவாலாக எழுந்தது. 1971 ஆம் ஆண்டு சித்திரையில் தென்னிலங்கையில் வெடித்த ஜே. வி. பி. யினரின் ஆயுதக் கிளர்ச்சியை வெற்றிகரமாக நசுக்கி, பதினையாயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்த பண்டாரநாயக்கா அம்மையார் தமிழீழத்திலும் அரச அடக்கு முறையை முடுக்கி விடத் தயங்கவில்லை. அரச ஆயுதப்படையினரால் தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்பட்டனர். விசாரணையின்றி சிறையில் தள்ளப்பட்டனர். மிருகத்தனமான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர். இந்தக் கொடுமை காரணமாக பல தீவிரவாத இளைஞர்கள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்தது. ஆயினும் வன்முறை அலைகள் ஓயவில்லை.

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

தமிழ் இளைஞர்களின் வன்முறைப் போராட்டம், ஒழுக்கம், கட்டுப்பாடு கொள்கைத் திட்டத்தைக் கொண்ட ஒரு புரட்சிகர அமைப்பு மூலம் நெறிப்படுத்தப்படவில்லை. தனிநபர்களாகவும், ஒரு சிலரைக் கொண்ட குழுக்களாகவும், தன்னிச்சையான போக்கில் வன்முறையில் இறங்கிய இளைஞர்களுக்கு அனுபவமோ ஆயுதம், வெடிமருந்துகள் பற்றிய அறிவோ, பயிற்சியோ, போர்யுக்தி, போர் முறைத் திட்டங்கள் பற்றிய தெளிவோ இல்லாததால் பெரும்பாலான வன்முறை முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. எனினும் விடுதலையுணர்வும், அரச ஒடுக்கு முறைக்கு, எதிரான ஆவேசமும், புரட்சிகரப் போர்க்குணமும் இந்த இளைஞர்கள் மத்தியில் மிகுந்து காணப்பட்டது.

வன்முறை அரசியலில் ஆர்வம் கொண்ட இந்த புரட்சிவாத இளைஞர்கள் அனைவரும் தம்மைத் தமிழ் மாணவ பேரவையினர் என அழைத்துக் கொண்டனர். சத்தியசீலன் என்ற பட்டதாரி மாணவன் தலைமையில் இந்த அமைப்பு இயங்கி வந்தது. சிவகுமாரன், பிரபாகரன், தங்கத்துரை போன்றோர் இந்த அமைப்போடு தொடர்பு கொண்டு இயங்கி வந்தனர்.

செயற்திறனற்ற தலைமை காரணமாக இந்த அமைப்பு செம்மையாக செயற்படவில்லை. சத்தியசீலன் இளைஞர்களை வன்முறைக்குத் தூண்டிவிட்டாரே தவிர களத்தில் இறங்கத்துணியவில்லை. புரட்சிகர கொள்கைத் திட்டமோ, செயற்பாடோ இல்லாததனாலும், ஆயுதப்போராட்டம் பற்றிய தெளிவு இல்லாததனாலும் வன்முறை நிகழ்வுகள் மாறி, மாறி தோல்வி கண்டதாலும், பேரவைத் தலைமை மீதும் விரக்தியடைந்த பிரபாகரன் தனித்தியங்க முடிவு செய்தார். எதேச்சையாக, கட்டுப்பாடற்ற முறையில் திசையின்றி பிரவாகமெடுத்த வன்முறை எழுச்சியானது இளைஞர் சமூகத்தின் இதயக் குமுறலை வெளிப்படுத்தியதே தவிர மக்களின் உரிமைப் போராட்டத்தினை முன்னெடுக்கவில்லை என்பதை பிரபாகரன் புரிந்து கொண்டார்.

தேசிய விடுதலையை இலட்சியமாக வரித்த கொள்கைத் திட்டத்துடன் ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்ட அமைப்பு கட்டி எழுப்பப்பட வேண்டிய தன்வரலாற்றுத்தேவையையும் அவர் நன்கு உணர்ந்துகொண்டார். ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத்திட்டம் ஆகியனவற்றைக் கொண்ட ஒரு புரட்சிகர விடுதலை அமைப்பைக் கட்டி எழுப்பி, தீர்க்கமான ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்கவேண்டுமென உறுதி பூண்ட பிரபாகரன் 1972ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து அந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். வீரமும், அர்ப்பணிப்பும், விடுதலையுணர்வும் மிகுந்த புரட்சிகர இளைஞர்கள் பிரபாகரன் பின்னால் அணி திரண்டனர்.

1972ஆம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. ''புதிய தமிழ்ப்புலிகள்'' என்ற பெயரில் அமைப்பை உருவாக்கிய பிரபாகரன், அவசரப்பட்டு களத்தில் குதிக்காமல் ஆரம்பகாலத்தை தனது தோழர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிப்பதிலும், போர்முறைத் திட்டம் ஒன்றை உருவாக்குவதிலும் செலவழித்தார். அன்றைய எதாத்த சூழ்நிலையும், தமிழீழத்தின் பூகோளத் தன்மையையும், எதிரியின் இராணுவபலத்தையும் கருத்தில்கொண்டுநீண்டகால கெரில்லா [கரந்தடி] போர் முறையின் அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதே பொருத்தமானதென பிரபாகரன் முடிவுக்கு வந்தார் ஆரம்பகாலத்திலிருந்தே ''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்ற இலட்சிய வரிகளைப் புனைந்த பிரபாகரன் தமிழீழத் தாயகத்தை மீட்டு, சுதந்திர தனியரசு அமைப்பதே புலிகள் இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோளாக வரித்துக்கொண்டார்.

விடுதலைப்புலிகளின் தோற்றமானதுஎழுபதுகளைக்கொண்ட தசாப்தத்தின் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகவும் தமிழீழ தேசிய சுதந்திரப்போராட்டத்தின் ஒரு மாபெரும் திருப்புமுனையாகவும் அமைந்தது. திசை தெரியாது அலைமோதிய வன்முறை எழுச்சியிலிருந்து ஒரு திண்ணியமாள நீண்டகால ஆயுதப்போராட்டத்திற்கான உறுதியானஅத்திவாரத்துடன் புலிகள் இயக்கம் பறப்பை எடுத்தது. புலிகளின் பிறப்போடு புரட்சிகரமான

(4-ம் பக்கம் பார்க்க)

(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா மலரில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 'இரண்டு தசாப்தங்களும் புலிகளும்' என்ற கட்டுரை தொடர்ச்சியாக இங்கு தரப்படுகிறது.)

## தமிழீழ மீட்பு நிதி

### சாவகச்சேரி பிரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வட்டவையுள் அடங்கும் மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி, நுணாவில், மட்டுவில், சரசாலை, கைதடி, நாவற்குளி பகுதிகளில் உள்ள சகல சிற்றூரவைகளையும் சேர்ந்தவர்களிடமிருந்து 23-06-91 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையில் மீட்பு நிதி பெறப்படவுள்ளது.

மீட்பு நிதி செலுத்த உள்ளோர் சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# வலி வடக்கில் இராணுவ நடவடிக்கை: 40 பாடசாலை இயங்கவில்லை; 10 ஆயிரம் மாணவர் பாதிப்பு

## 20,000 குடும்பம் இடம்பெயர்வு

[யாழ்ப்பாணம்]

''வலிகாமம் வடக்கிலிருந்து 20 ஆயிரம் குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அகதிகளாகிவிட்டார்கள். இப்பகுதிகளில் உள்ள 40 பாடசாலைகள் இயங்காததினால் 10 ஆயிரம் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது''

வலி வடக்குப் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடாத்தப்பட்ட பொதுமக்களின் எழுச்சி ஊர்வலத்தின் இறுதியில் யாழ். மேலதிக அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பதற்கு முன்பு யாழ். செயலகத்தின் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில், வலி-வடக்கு பாதிக்கப்பட்டோர் இணையத்தின் தலைவர் திரு. ச.குலசூரியன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: ''கடந்த ஒருவருடமாக பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு 48 தடவைகள் வழங்கப்பட வேண்டிய உணவு நிவாரணத்துக்குப் பதிலாக இதுவரை 14 தடவைகள் மட்டுமே உணவு விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறு தடவைகள் மட்டுமே உணவு விநியோகம் கிடைத்துள்ளது.

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்களும், கடற்றொழிலாளர் குடும்பங்களும் இன்று நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். சிமெந்து தொழிற்சாலைகளும், துறைமுகங்களும் இன்று மூடப்பட்டுக்கிடக்கின்றன.

எமது பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகள் இயங்காததினால் மக்கள் வைத்திய வசதிகளின்றியும் தினமும் மடிந்து கொண்டிருக்கின்றார்கள்.

அன்றாடம் தொழில்செய்து வாழ்பவர்களும், சீவல் தொழில் செய்பவர்களும் ஆயிரக்கணக்கில் இன்று வேலையின்றி நடுவீதியில் நிற்கிறார்கள்.

ஓய்வூதியம், அரச ஊழியர் சம்பளம், தர்மப் பணம் பெறுபவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி எழுச்சி ஊர்வலத்தில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும், தொழில் நிறுவனங்களின் ஊழியர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வூர்வலத்தில், 'குண்டு மாரி பொழியாதே, கோவில்களை அழியாதே, மருத்துவ மனைகளை இடியாதே, மருந்துப் பொருட்களை தடுக்காதே, மனித உரிமையை மறுக்காதே மானிடக் குருதியில் மிதிக்காதே, சிங்களத்தேசம் பூக்காடு, தமிழரின் தேசம் சுடுகாடு, இராணுவத்தை அகற்று, இனக்கொலையை நிறுத்து' போன்ற கோஷங்கள் பெருமளவில் எழுப்பப்பட்டன. [வி 86]

# புதிய வைத்தியர்கள் பதவியேற்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட 25 வைத்திய அலுவலர்களில் எவரும் இதுவரை தங்கள் வேலைகளை இன்னும் பொறுப்பேற்கவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 15ந் திகதியிலிருந்து வைத்திய அலுவலர்கள் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நியமிக்கப்பட்ட வைத்திய அலுவலர்கள் தங்கள் வேலைகளை பொறுப்பேற்காத காரணத்தால் கிளிநொச்சி, புங்குடுதீவு, நெடுந்தீவு, வல்வெட்டித்துறை அக்கராயன் குளம், பூநகரி, நயினாதீவு ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (153)

## தமிழீழ மீட்பு நிதி

### தெல்லிப்பழை பிரிவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 22-06-91 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் ந. ப. 12 மணிக்குமிடையில் மீட்பு நிதி பெறப்படவுள்ளது.

மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தெல்லிப்பழை வட்ட செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, வறுத்தலைவிளான், மாவிட்டபுரம், தெல்லிப்பழை, கீரிமலை ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சென்று வேறு இடங்களில் வாழ்வோர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

★ காணாமல்போன

# 10,000 இலங்கையரை தேடி அமைச்சர் லெபனான் விஜயம்

(கொழும்பு)

லெபனானில் காணாமல்போன 10000இலங்கையர்பற்றி அறிய தொழிற்துறை அமைச்சர் திரு. பிரேமச்சந்திரா தலைமையிலான குழு ஒன்று லெபனான் சென்றுள்ளது.

வளைகுடாவில் அண்மையில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின்போதே இவர்கள் காணாமல் போனார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல்போனவர்களில் பெருமளவினர் சட்டவிரோதமாகவே லெபனான் சென்றதாகவும், தமது விஜயத்தின்போது லெபனான் வெளியுறவு அமைச்சர், தொழில் அமைச்சர்களையும் தாம் சந்திக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (சி)

## ராஜீவ்கொலைக்குண்டு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

புலன்விசாரணைகள் புலப்படுத்துவதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார்.

குறிப்பிட்ட வெடி குண்டு மிகவும் அபாயம் பொருந்தியதாகவுள்ளதால் வேறு இடத்தில் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட இடத்துக்கு கொண்டு வந்திருக்க முடியாது என அவர் குறிப்பிட்டார். (க)

## விமானத்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளன.

இப்பகுதியிலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்டமக்கள் இடம் பெயர்ந்து மடு அகதி முகாமுக்கும், பிற இடங்களுக்கும் சென்றுள்ளனர்.

இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்களில் பலர் அ க[ப்]பட்டிருக்கலாமென்றும், இராணுவத்தினால் கைது செய்யப்பட்டிருக்கலாமென்றும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன (56)

## அரசின் செயலுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதனை அடுத்து விடுதலைப் புலிகளின் மீது இந்திய மக்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தினையும் இந்திய அரசியலில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தையும் இலங்கை அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தமிழர்கள் மீது கடும்தாக்குதலை நடாத்தியிருக்கிறது.

மேலும் மே 23ம் திகதி கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற தமிழர்படுகொலைச் சம்பவத்தையடுத்து பிரதமர் டி. பி. விஜயதுங்கவின் கொக்கட்டிச்சோலை விஜயம் ஒரு கண்துடைப்பும் போலியுமாகும்.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் விடுதலைப்புலிகள் சந்தேகிக்கப்படுவதால் இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகள் மீது கடும் தாக்குதலை நடாத்தி வருவதாகவும் அறிக்கையில் வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச]

## வேங்கைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதா [வைத்திலிங்கம் பரமலிங்கம், அராலி], கண்ணையா [வேலாயுதம் சிவகுமார், நீர்வேலி], ஆனந்தகுமார் [சங்கர் சுப்பிரமணியம், மானிப்பாய்], குமார் [பரமன்நாதர், திருமலை] ஆகியோரதும் இவர்களுடன் வீரமரணமடைந்த வேங்கைகளதும் புகழுடல்கள் இன்று காலை மக்கள் அஞ்சலிக்காக சுன்னாகம் சந்தை மைதானத்தில் 10 மணி தொடக்கம் 12 மணி வரை வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாக்கப்படும்.

இந்த மண்ணையும் மக்களையும் நேசித்து வீரமரணமடைந்த இவ் வீரவேங்கைகளின் இறுதி நிகழ்ச்சிகளில் அனைத்து தமிழீழ மக்களையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப்புலிகள் கேட்டுள்ளனர்.

## 1972-ம் ஆண்டு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு புதிய வரலாறும்பிறந்தது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆந் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டுப்படுகொலைகள் இனத்துவேச அரசியலில் அசிங்கமான வெளிப்பாடாக அமைந்தன. தமிழரின் கலாசார வாழ்வை சிதைக்கவும் சிங்கள அரசு தயங்காது என்பதை இந்நிகழ்வுஎடுத்துக்காட்டியது இச்சம்பவம் தமிழீழ மக்கள் மனதில் என்றுமே மாறாத ஒரு வடுவை ஏற்படுத்தியதோடுஇனமுரண்பாட்டை மேலும் இறுகச்செய்தது.

[நாளை: தமிழாராய்ச்சி மாநாட்டின் படுகொலை சம்பவத்திற்கு சூத்திரகாரி யார்?

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் பின்வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

7 நாள் சண்டையில் 75க்கு மேற்பட்ட படையினர்கொல்லப்பட்டதாகவும், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

6 நாட்களாக பிரமனாலயங்குளம், சின்னத்தம்பனை, குருக்களூர் பகுதிகளிலேயே படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் உக்கிரத் தாக்குதல்இடம்பெற்றுவந்தது.

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு நின்றுபிடிக்கமுடியாத நிலையில் இதுவரைகாலமும் ஏற்படாத தோல்வியும், இழப்புகளும் வன்னிப்பிராந்தில் இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

8,0000த்துக்கும் அதிகமான படையினர் இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் புலிகளின் உக்கிரத் தாக்குதலையடுத்தே படையினர் பின்வாங்கும்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56)


வெளிவந்துவிட்டது

வரலாறும் சமூகக்கல்வியும்

ஆண்டு 10

துரித மீட்டலுக்கான வினாவிடை

ஆக்கம்:- க. சந்திரசேகரம்

(ஆண்டு 11 மாணவர்களுக்கும் பயன்படக்கூடியது)

[ஏ-1394]


## பகிரங்க அறிவித்தல்

### நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

நல்லூர் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டப்பட்டிருத்தல் வேண்டும். தேனீர்க்கடைகள், மருந்துக்கடைகள், பத்திரிகைக் கடைகள் ஆகியவற்றுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தேனீர்க்கடைகள் தேனீர் சம்பந்தப்பட்ட உணவுப் பண்டங்களையும், மருந்துக் கடைகள் மருந்து சம்பந்தப்பட்ட பொருட்களையும், பத்திரிகைக் கடைகள் பத்திரிகைகளையும் மட்டும் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது. சகல வர்த்தகர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

என். கே. குலசிங்கம்
உப தலைவர்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்,
நல்லூர். [சி 4887]


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81


# தேசிய முன்னணி எதிர்க் கட்சி

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்றில் தேசிய முன்னணி எதிர்கட்சியாகவே செயர்படுமென கட்சியின் முக்கிய தலைவர் திரு. என். ரி. ராமராவ் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி ஆட்சியமைக்க ஆதரவு தருமாறு இதுவரை இந்திரா காங்கிரஸ் தேசிய முன்னணியை அணுகவில்லை என்றும் திரு. ராமராவ் தெரிவித்தார்.

தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மாக்ஸிஸ கம்யூனிஸ் கட்சியையும் காங்கிரஸ் ஆதரவு கோராததால் தாமும் எதிர்க்கட்சியிலேயே அமரவுள்ளதாகவும் கட்சியின் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

இம்முறை தேசிய முன்னணி பாராளுமன்றத்தில் 130 இடங்களை பெற்றுள்ளதும் தெரிந்ததே.

# பிரேமதாஸா கைது

[சென்னை]

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு விசைப் படகில் சென்ற பிரேமதாசா மற்றொருநபருடன்சேர்ந்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தஞ்சாவூர் வேதராணியம்கடலில் வைத்து பிரேமதாஸாவும், மோகன் என்பவரும் சுங்கப்பகுதியினரின் உதவியுடன் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

## நரசிம்மராவ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்படி அறிவிக்கப்பட்டது.

திரு. சரத்பவார் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்ததையடுத்தே திரு. பி. வி. நரசிம்மராவ் காங்கிரசின் பாராளுமன்றத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளையில் திரு. சரத்பவாரும், திரு. நரசிம்மராவ்வும் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவது தொடர்பாக நேற்றுமுன் தினம் பேச்சுவார்த்தை நடத்தியதும் தலைவர் தெரிவு ஏகமனதாகவே நடைபெறும் என திரு. பி. வி. நரசிம்மராவ் தூரதர்ஷனுக்குப் பேட்டியளித்ததும் தெரிந்ததே.

உத்தரப் பிரதேசத்திற்கு வெளியிலிருந்து பிரதமராக ஒருவர் தெரிவு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். (க)

## ஒருவாரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கணக்கான படையினர் காயமடைந்துள்ளதாக சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா, மணலாறு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற யுத்தத்திலேயே இராணுவத்தினருக்கு இவ்வாறு இழப்புக்கள் ஏற்பட்டன.

விமானத் தாக்குதல் மற்றும் ஹெலிகொப்டரின் உதவியுடன் இராணுவத்தினர் புலிகளுடன் மோதியபோதிலும் இராணுவத்தினரின் இழப்புக்களைக் குறைக்க முடியவில்லை என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

## ஷெல் தாக்குதல்

(வேலணை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி நேற்றும் நேற்றுமுன்தினம் இரவும் பாரிய ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிப்பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

புளியங்கூடல், சரவணை, வேலணை மேற்குப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்துச் சிதறியதில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. (75)

## இன்று பதவியேற்பு

(புதுடில்லி)

இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக திரு. பி. வி. நரசிம்மராவ் இன்று பதவியேற்கிறார். நேற்று மாலை இவர் திருமதி சோனியா காந்தியை சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

## 35 தமிழர் கைது

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோமாரி என்னுமிடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கடந்த 13-ம் திகதி 35 தமிழ் பொதுமக்களை கைது செய்து அவர்களில் 15 தமிழர்களை முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

முகாம்கொண்டு செல்லப்பட்ட தமிழர்களின்கதி என்னவென்பது பற்றிய தகவல் எதுவும் இதுவரைகிடைக்கவில்லை.

## இனப்பிரச்னை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமெனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கோரியுள்ளனர். (சி)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் பரமலிங்கம்

(வீரவேங்கை சின்னச்சுதா)

(அராலி)

அராலி தெற்கைச் சேர்ந்த வீரவேங்கை சின்னச்சுதா (வைத்திலிங்கம் பரமலிங்கம்) வவுனியாவில் 19ம் திகதி இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்துள்ளார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் அவரது அராலி இல்லத்தில் இன்று [21-06-1991] வெள்ளிக்கிழமை காலை நடைபெறும் இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: தலைவர்,

அராலிமாவத்தை விளையாட்டுக் கழகம்

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (சி-4888)